(4) அரசு உயர்நிலைப் பள்ளிகளில் (முன்னாள் கழக உயர்நிலைப் பள்ளிகள்) 1—4—1970 முதல் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பணி வரன் முறைப்படுத்தப்படாதது.

THIRU V. ISVARMURTI : Mr. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to an urgen t matter of public importance, namely,

" the non-regularisation of the services of thousands of B.T. Assistants in Government High Schools (former District Board High Schools) appointed from 1st April 1970 despite the Government Order mentioned by the Hon. the Minister for Education on the floor of the Legislative Council on the 3rd March 1973 and the consequent distress caused to them."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் (பி. பிரிவு) 1—4—1970 முதல் 3—3—1973 வரை நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பணி, தனி வகையாக (as a special case) முறைப்படுத்தப்படும் என்று 3—3—73 நாளிட்ட கல்வித் துறையின் அரசாணை எண் 351-ல் ஆணையிடப் பட்டது. அரசு உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் பதவி தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவின் (Tamil Nadu Public Service Commission) வரம்பிற்குள் இருக்கிறது. அக்குழுவின் விதி 16 (பி)-ன் பின் பகுதிப்படி, அதன் ஒப்புதல் பெற்ற பின்னரே மேற்கண்ட ஆணையைச் செயல்படுத்த முடியும். மேலும் "பி—பிரிவு" அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாகப் பணியாற்றிவரும் பட்டதாரி ஆசிரியர்கள் உட்பட 3,087 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு ஆணைக்குழுவால் அண்மையில் நேரடித் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த 3,087 ஆசிரியர்களில் 2,292 ஆசிரியர்கள் ஏற்கனவே பி. பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகப் பணியிலிருப்பவர்கள். 144 ஆசிரியர் களே 'ஏ' பிரிவில் தற்காலிகப் பணியிலிருப்பவர்கள். எஞ்சிய 651 நபர்கள் அவ்வாறு தற்காலிகப் பணியில் இல்லாதவர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா ஆசிரியர்களிடமிருந்தும் அவர்களைப் பற்றிய முழு விவரங்கள் குறிப்பிட்ட படிவத்தில் கேட்கப்பட்டன. இப்படிவங்கள் சென்ற அக்டோபர் மாதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு வந்து சேர்ந்தன. ஏற்கனவே பணியில் இல்லாத 651 நபர்களுக்கு மாவட்ட வாரியாக பதவி நியமன ஆணை இயக்குநரால் வெளியிடப்பட்டு வருகிறது. விரைவில் அவர்கள் எல்லோருக்கும் ஆணைகள் அனுப்பப்பட்டு விடும். அதன்பின் ஏற்கனவே தற்காலிகப் பணியிலிருக்கும் மற்ற 2,436 ஆசிரியர்களது பணியும் இயக்கு நரால் வரன்முறை செய்யப்படும்.

3—3—73 நாளிட்ட அரசாணை எண் 351-ன்படி பணி முறைப்படுத்தப் படவேண்டிய பட்டதாரி ஆசிரியர்களின் பெயர் முதலிய விவரங்களும், தளர்த்தப்பட வேண்டிய விதிகளைப் பற்றிய விவரங்களும் பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து கேட்கப்பட்டிருக்கின்றன. தேர்வு ஆணைக் குழுவால்

தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் 3,087 பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் முறையாக நியமனம் செய்யப்பட்ட பின்னரே, மேற்குறிப்பிட்ட விவரங்களை இயக்குநரால் அனுப்ப முடியும். அவ்விவரங்கள் அரசுக்கு கிடைத்த உடன் 1—4—1970 முதல் 3—3—1973 வரை அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிக நியமனம் செய்யப்பட்டிருக்கும் பட்டதாரி ஆசிரியர்களில் எஞ்சியுள்ளோர்களின் பணியை வரன் முறைப்படுத்துவதற்கு தேர்வு ஆணைக் குழுவின் ஒப்புதலைப் பெற அரசு தேர்வு ஆணைக் குழுவைக் கலந்து ஆலோசிக்கும்.

விதிகளின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் மூலமாகவே அரசு உயர்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் பதவிக்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்தத் தேர்வில் சற்று மாறுபட்ட ஒரு வழி முறையைக் கையாள இருப்பதால் சிறிது தாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும் என்றும் இப்பொருள் துரிதப்படுத்தப்பட்டு அவ்வாசிரியர்களின் தற்காலிகப் பணி கூடிய விரைவில் தேர்வாணைக் குழுவின் ஒப்புதல் பெற்று முறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru V. ISVARMURTI : Mr. Chairman, Sir, what the teachers would like to know is whether their services will be regularised from the date of their first appointment because they have been several times ousted and then reposted.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவரவர்களே, இது பற்றிய விளக்கங்கள் தெரியவில்லை. ஆனால் ஏற்கெனவே இருக்கிற ஆணைப்படி முறைப்படுத்தப்படும். சிக்கல்கள் இருக்குமானால், தனியாகக் கவனிக்கலாம்.

6. மேலவை விதிக் குழுவின் அறிக்கை

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவரவர்களே, இவ்வவையினால் அமைக்கப்பட்ட மேலவை விதிக் குழுவின் பரிந்துரைகள் கொண்ட அறிக்கையினைக் குழுவின் சார்பில் இம்மன்றத்தின் முன் வைக்கின்றேன். இக் குழு தங்களது தலைமையில் எவ்வளவு சீரிய முறையில் இயங்கியது என்பதற்கு இவ்வறிக்கையும், குழுவின் அன்றாட நடவடிக்கைக் குறிப்புகளுமே சான்றாகும். மேலவை விதிகளின் தமிழாக்கத்திலேயே குழு தன் முழு கவனத்தையும் செலுத்தியது. அவ்வாறு விதிகளை ஆயும்போது, மிகவும் தேவைப்பட்டதெனக் கருதப்பட்ட சில மாற்றங்களை, குழுவின் அறிக்கையில் 7, 8-வது பத்திகளில் கண்டுள்ளபடி செய்துள்ளது. இக்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் மிகுந்த ஆர்வத்துடன் பணிபுரிந்ததன் விளைவாகவே, தமிழாக்கத்தை மிகவும் சீரிய முறையில், தலைவரவர்களே, தங்களது தலைமையில், குழுவினால் செய்ய முடிந்தது. இதைத் தமிழாக்கம் என்று சொல்வதைவிட, விதிகள் தமிழிலேயே இயற்றப்பட்டன என்று சொன்னால் அது மிகையாகாது. விதிகள் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு தனியே கூடிய விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.